பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.05 நாள் : 11. 01. 2018

**தூய்மை இந்தியா திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி தரவரிசையில் முன்னிலை வகிக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தூய்மையான நகரங்களை தர வரிசைப்படுத்துவதற்காக கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பட்டியலில் பெருநகர சென்னை மாநகராட்சி முன்னிலை வகிக்க பொதுமக்கள் பெருமளவில் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு வீடு மற்றும் நகரப்புற வளர்ச்சித்துறை அமைச்சகம் சார்பில் தூய்மை இந்தியா திட்டம் நாடு முழுவதும் உள்ள 4,041 நகர உள்ளாட்சி அமைப்புகளில் அக்டோபர் 2, 2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது சம்மந்தமாக ஒவ்வொரு ஆண்டும் தூய்மை நகர கணக்கெடுப்புப்பணி எடுக்கப்பட்டு, தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது. இவ்வருடமும், தூய்மை இந்தியா திட்டம் சார்பில் தூய்மை நகர கணக்கெடுப்பு பணி-2018 (Swachh Survekshan - 2018) இந்த மாதம் நடைபெற உள்ளது. இக்கணக்கெடுப்பில், பெருநகர சென்னை மாநகராட்சியும் பங்கேற்க உள்ளது.

தூய்மை நகர தரவரிசைப் பட்டியல், மதிப்பெண்கள் பட்டியலின் அடிப்படையில் வெளியிடப்படும், அதன்படி, நகர உள்ளாட்சி அமைப்புகளின் ஆவணங்களுக்கான 1,400 மதிப்பெண்கள், நேரடி கள ஆய்வுக்கு 1,200 மதிப்பெண்கள் மற்றும் பொதுமக்கள் கருத்துக்கு 1,400 மதிப்பெண்கள் என மொத்தம் 4,000 மதிப்பெண்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கணக்கெடுப்பு பணி 2018 ஜனவரி 4 ம் தேதி முதல் மார்ச் 10ம் தேதி வரை நடைபெறுகிறது.

எனவே, மாநகரின் தூய்மை குறித்து தங்களது கருத்துகளை பொதுமக்கள் கட்டணமில்லா தொலைபேசி எண் 1969 மற்றும் 1800 111 969 (Toll free Number) என்ற எண்ணுக்கு அழைத்து, தூய்மை இந்தியா சார்பில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தக்க கருத்துகளை தெரிவிக்கலாம். மேலும், www.swachhsurvekshan2018.org/citizenfeedback என்ற இணையதள முகவரி மற்றும் தூய்மைக்கான செயலியிலும் (Swachhata App) பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிகழ்வுகளுக்கு பொதுமக்கள் தங்களுடைய ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**